
24p87

# முஸ்லிம் சுயாட்சி!




எம். எச். சேகு இஸ்ஸதீன்

முஸ்லிம் தேசியவாதிகள் இயக்கம்

தோழர், தோழியர்களுக்கு!

என்று தொடங்கியது என்று தெரியாத
ஒரு யாத்திரையில்
எங்கு முடியும் என்று தெரியாத
ஒரு பாதையில்
பல சந்தோசங்களோடும்
சில சந்தேகங்களோடும்
நமது பயணம் தொடங்கிற்று.

நமது வழியில் நாம் சந்தித்த
ஏமாற்றங்களும் தோல்விகளும்
நம்மை உருக்கி வார்த்து
நம்மை மனித நேயர்களாக்கின.

நமது விடுதலைக்காக
நமது தோளில் சுமத்தப்பட்ட சிலுவை
நாம் தாங்க முடியாத
சுமையாகவே இருக்கிறது.

எனினும்,
நமது தோழமையும் உறுதியும்
நம்மைப் போராளிகளாகவே
வாழச் செய்கின்றன.

இறுதிவரை தொடர்வோம் என்ற
நமது நம்பிக்கையும்
இருக்கும் வரை போராடுவோம் என்ற
எமது துணிவும்
நமது பாதைக்கு வெளிச்சத்தையும்
பாதங்களுக்குப் பலத்தையும் தருகின்றன.

வரலாறு படைத்த நமது நேசமும்
வாகை சூடும் நமது நல்லெண்ணமும்
நமது வாழ்வின் வசந்தகால விருட்சமாய்
மலர்களையும் கனிகளையும் நிறைக்கும்.

வாஞ்சையுள்ள

03/01/2007
2487

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்
அன்பிலுள்ளவர்களே!
அஸ்ஸலாமு அலைக்கும்!

இது ஒரு தேசத்தின் விண்ணப்பமாகும்.
தான் காணப்படாமலும், தேடப்படாமலும்
விடப்பட்டுள்ள சோகம் பற்றி
இந்தத் தேசம் முறையிடுகிறது.

தனக்குரிய அந்தஸ்து தரப்படாமலும்,
தட்டிக் கேட்கப்படாமலும் விடப்படுவதில்
இந்தத் தேசம் தாங்கொணாத வேதனையடைகிறது.
மெய்ஞ்ஞான வேதத்துக்கும்,
விஞ்ஞான வாழ்முறைக்கும்,
அஞ்ஞாத வீர வரலாற்றுக்கும் உரித்துடைய
முஸ்லிம்களின் தாயகப்பூமி தான் தானென்று
இந்த அறியப்படாத தேசம் உரிமை கோருகிறது.

நிலமும், நீரும், கடலும், காடும் சொந்தமாகக் கொண்ட
தனது எல்லைகளை அடையாளம் காட்ட
அது தேசப்படத்தை திரை நீக்கம் செய்கிறது.

சுடுகலன்களின் புகைப்படலங்களால்
தான் மூடப்பட்டு இருப்பதனால்





தன்னை இழந்துவிடத் தயாராகிவிட்ட
தனது மக்களின் இயலாமைக்காய்,
அறியாமைக்காய் அது வருந்துகிறது.

முஸ்லிம் தேச சஞ்சாரத்துக்கென
நான் சவாரி கட்டிக் கொண்டபோது
அந்த மாதா, என்தன் காதில்,
ஓதி ஊதிய சேதியில்
இப்போதைக்கென்று, இவ்வளவையும்
அமானிதமாக அறிவித்துள்ளேன்.

முஸ்லிம் தேசத்தாயின் இதயக்குமுறல் தணிக்கப்படும்.
கண்ணீர்த்துளிகள் துடைக்கப்படும்.

இந்த மகத்தான மாதாவின் மனதை
மகிழச் செய்யும் நாள் வந்தே தீரும்.
அதுவரை என்னைத் தொட்டும், தொடர்ந்தும்
நூற்றுக்கணக்கான பேனாப்போராளிகள்
தளம் அமைப்பர்!

ஆயிரக்கணக்கான முஸ்லிம் தேசியப் போராளிகள்
களம் குதிப்பர்.
இன்ஷா அல்லாஹ்!

முஸ்லிம்களின் தாகம், சமத்துவத் தாயகம்!
முஸ்லிம் தேசத் தொண்டன்

**எம். எச். சேகு இஸ்ஸதீன்**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

வட - கிழக்கு மாகாணங்களின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

நமது நிகழ்காலத்தையும், நமது சந்ததிகளின் எதிர்காலத்தையும் இந்தத் தேசிய இனப்பிரச்சினை சேர்த்துக் கொண்டுள்ளது.

இந்தத் தேசிய இனப்பிரச்சினை இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழர் தேசியத்துக்கும் இடைப்பட்ட ஒரு பிரச்சினையாகவே இன்றுவரை கருதப்பட்டு வருகிறது.

இந்தக் கருத்து உண்மைக்கு மாற்றமானது. யதார்த்தத்துக்குப் பொருத்தமில்லாதது. அதனால் இந்தக் கருத்தோடு நாம் உடன்பாடு காண முடியாதவர்களாக இருக்கிறோம்.

நம்மைப் பொறுத்தவரையில், தேசிய இனப்பிரச்சினை வட - கிழக்கு மாகாணங்களின் தமிழர் தேசியத்தினதும், முஸ்லிம் தேசியத்தினதும் பிரச்சினையாகும். எனவே முஸ்லிம் தேசியத்தை பேச்சுவார்த்தைகளுக்கு ஒரு தனித்தரப்பாக ஏற்றுக் கொள்வது அவசியமானதாகும். தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுகளை முஸ்லிம்களின் முதுகுக்குப் பின்னால் செய்வதை நாம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. அதனாலேயே இனப்பிரச்சினை தொடர்பான நடவடிக்கைகளில், பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் தேசியம் ஒரு தனித்தரப்பாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பதை நாம் வலியுறுத்தி வருகிறோம். நம்மில் சிலர் இதுபற்றி அறியாமலிருப்பதும், இன்னும் சிலர் எதிர்ப்பதுவும் விரைவில் திருத்தப்பட்டுவிடும்.

முஸ்லிம்கள் ஒரு தனித் தரப்பாக ஏற்கப்படாவிட்டால், முஸ்லிம்கள் ஒரு தேசியம் என்ற உண்மை நிராகரிக்கப்படுகின்றது என்று அர்த்த மாகும். முஸ்லிம்கள், தமிழர்களைப்போல ஒரு தனித்த தேசியம்





இல்லையென்றாகி விட்டால், முஸ்லிம்களுக்கு அதிகாரப் பங்கீடு இல்லையென்றும் அர்த்தமாகும்.

முஸ்லிம்கள் தம்மை தமது பிரதேசங்களில் ஆளக்கூடிய அனுமதியைப் பெற்றுக் கொள்ளாவிட்டால், வட - கிழக்கு மாகாணங்களில் அதிகாரப் பங்கீட்டைப் பெறப்போகின்ற தமிழர்களின் ஆட்சியின் கீழேயே முஸ்லிம் பிரதேசங்களும், அதனால் முஸ்லிம்களும் கொண்டு வரப்படுவர். ஆட்சி கிடைக்காத நிலையிலேயே முஸ்லிம்களை ஆட்டிப் படைக்க எண்ணும் தமிழர்களுக்கு சமஷ்டி ஆட்சியோ, அல்லது அதற்கு ஈடான, மாற்றான ஆட்சியோ கிடைக்கும்போது முஸ்லிம்களின் நிலை என்னவாயிருக்கும்? என்பதை முஸ்லிம்கள் ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

> “வட - கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்களையும் இணைத்து வலயப்படுத்தி, ஒரு அலகாக்கி அந்த அலகுக்கு அதிகாரப் பங்கீடு செய்யப்படவேண்டும். சாத்தியமான விடயங்கள் அனைத்திலும் முஸ்லிம்களுக்கு ஒரு சுயாட்சி அதிகாரம் வழங்கப்படவேண்டும். வட - கிழக்கின் முஸ்லிம் பிரதேசங்களின் நிலத்தொடர்பற்ற தன்மையைக் கருத்தில் எடுத்து வரையறுக்கப்பட்ட சமஷ்டி ஆட்சியோ அல்லது அதற்கு ஈடான, மாற்றமான ஆட்சியோ பெறப்படவேண்டும். அவ்வாறு பெறப்பட்டால்தான் வட - கிழக்கின் முஸ்லிம்கள் தலைநிமிர்ந்து வாழவும், தமது சந்ததிகளுக்கு ஒரு தன்மான வாழ்வை வழங்கவும் முடியும்.”

ஆகவே, வட - கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்களையும் இணைத்து வலயப்படுத்தி, ஒரு அலகாக்கி அந்த அலகுக்கு அதிகாரப் பங்கீடு செய்யப்பட வேண்டும். சாத்தியமான விடயங்கள் அனைத்திலும் முஸ்லிம்களுக்கு ஒரு சுயாட்சி அதிகாரம் வழங்கப்படவேண்டும். வட - கிழக்கின் முஸ்லிம் பிரதேசங்களின் நிலத்தொடர்பற்ற தன்மையைக் கருத்தில் எடுத்து வரையறுக்கப்பட்ட சமஷ்டி ஆட்சியோ அல்லது அதற்கு ஈடான, மாற்றமான ஆட்சியோ பெறப்படவேண்டும். அவ்வாறு பெறப்பட்டால்தான் வட - கிழக்கின்

முஸ்லிம்கள் தலைநிமிர்ந்து வாழவும், தமது சந்ததிகளுக்கு ஒரு தன்மான வாழ்வை வழங்கவும் முடியும்.

நம்மைப் பொறுத்தவரை வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தாயகமாகக் கொண்ட சகல முஸ்லிம்களும் ஒரு இனம்தான். ஒரே தேசியம்தான். வடக்கையும், கிழக்கையும் பிரிக்கக்கோரி வடமாகாண முஸ்லிம்களை கிழக்கு மாகாண முஸ்லிம்களிலிருந்தும் துண்டித்துப் பிரிக்க நாம் விரும்பமாட்டோம். வட - கிழக்கு முஸ்லிம் தேசியத்தை கிழக்குக்குள் குறுக்கி மன்னாரிலிருந்து திருகோணமலை வரையுள்ள பிரதேசத்தைத் தவிர்த்து முஸ்லிம் தேசத்தை சுருக்கிக் கொள்ளப் பிரியப்படமாட்டோம். எவ்வாறு நாம் வடமாகாணத் தமிழர்களும் கிழக்கு மாகாணத் தமிழர்களும் பிரிந்து விடக்கூடாது என்று பிரியப்படுகிறோமோ, அவ்வாறு முஸ்லிம்களை வடக்கத்தார் என்று பிரித்து அவர்களைத் தனிமைப்படுத்தி நாமும் தனிமைப்பட்டுப் போவதை நாம் விரும்பவில்லை.

“ வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைந்த நிலப்பரப்பே தமிழ்மொழி மாநிலமாகும். இந்த மாநிலம் நமது மாநிலமும்தான். இலங்கையில் மூன்றில் ஒரு பகுதியில், தமிழ் மாநிலத்தில் பரந்து வாழும் முஸ்லிம் தேசியத்தின் உடலை வடக்கு, கிழக்கு என்று பிரித்துக் கூறுபோடுவதை நாம் விரும்பவில்லை; அது சரியான தீர்வுமில்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைந்த நிலப்பரப்பே தமிழ்மொழி மாநிலமாகும். இந்த மாநிலம் நமது மாநிலமும்தான். இலங்கையில் மூன்றில் ஒரு பகுதியில், தமிழ் மாநிலத்தில் பரந்து வாழும் முஸ்லிம் தேசியத்தின் உடலை வடக்கு, கிழக்கு என்று பிரித்துக் கூறுபோடுவதை நாம் விரும்பவில்லை; அது சரியான தீர்வுமில்லை.

இந்தத் தமிழ்மொழி மாநிலத்தில் அடையாளம் அங்கீகரிக்கப்பட்ட மூன்று தமிழ்மொழிச் சமூகங்களும், இரண்டு வகைப் பிரதேசங்களும், இரண்டு தேசியங்களும் இருக்கின்றன.

தமிழ் ஹிந்து சமூகமும், தமிழ் கிறிஸ்தவ சமூகமும், முஸ்லிம்





சமூகமும் இருக்கின்றனர். இவர்களில் தமிழ் ஹிந்துக்களும், தமிழ் கிறிஸ்தவர்களும் ஒரே விதமான, ஒரே வீதமான திராவிடர்களாகும், அதனால் அந்த இரு சமூகங்களும் தம்மை ஒரே தமிழர் தேசியமாகவே கருதுகின்றனர். பிரித்து அடையாளம் காட்டக்கூடிய தமிழர் பிரதேசங்களில் பாரம்பரியமாக அவர்கள் இணைந்து வாழ்ந்து வருகின்றனர். அதனால் அரசியல் உரிமைப் பிரச்சினைகள் எழுந்தபோது பிரிந்து நின்று ஆட்சி அதிகாரம்கோர உரிமை உள்ளவர்கள் ஆகின்றனர். அதற்காக தொடர்ச்சியாக ஒரு ஆயுதப் போராட்டத்தை நடத்திவருகிறார்கள்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், தமிழ் தேசியத்தைப்போல, தாமும் திராவிடர்கள்தாம் என்று முஸ்லிம்கள் நினைப்பதில்லை. 1985ன் தமிழ் - முஸ்லிம் கலவரங்கள், 1990ன் முஸ்லிம் படுகொலைகள், முஸ்லிம் இனச்சுத்திகரிப்பு, அதன் பின்னர் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த மேலாதிக்க வன்முறைகள், அல்லது ஆயுத, அரசியல் மேலாதிக்கம், வட - கிழக்கு மாகாணசபையின் பாரபட்சம் என்று எல்லாமாய்ச் சேர்ந்து தமிழ்மொழிச் சமூகங்களில், முஸ்லிம்களை ஒரு தனியான சமூகமாக வேறுபடுத்தி பிரித்து வைத்துள்ளன. இதுகூட நாம் விரும்பும் ஒன்றல்ல. ஏனெனில் நாம் நாமாகப் பிரிந்தவர்களுமல்ல. நாம் தனியான இனம் என்று பிரிக்கப்பட்டோம்; தவிர்க்கப்பட்டோம். ஓரங்கட்டப்பட்டோம்.

தமிழ் ஹிந்துக்களும், தமிழ் கிறிஸ்தவர்களும் ஒரே நிலைப்பாட்டில் இருப்பதனால்; முஸ்லிம்கள் வேறுபடுத்தப்பட்டது மதரீதியான காரணத்துக்காக என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழர் சமூகங்கள் முஸ்லிம்களை வேறுபடுத்தி, பிரித்துப் பார்ப்பதற்கான காரணங்கள் வேறாக இருக்கின்றன.

முஸ்லிம்கள், தமிழர் சமூகங்களது திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பது காரணமாய் இருக்கிறது. ஏனெனில் முஸ்லிம்கள் தாய்வழியில் மட்டுமே திராவிடக் கலப்புடையவர்களாக இருந்தார்கள். தந்தை வழியில் முஸ்லிம்கள் திராவிடர்களல்ல. மேலும் பல நூற்றாண்டுகள் கடந்துவிட்ட இன்றைய நிலையில் தாய்வழியிலான திராவிடக்கலப்பு மறைந்துவிட்டது. அதனால் முஸ்லிம்கள் ஒரு தனியான இனம் என்பதுவும், தமிழர்களைப் போல் திராவிடர் இனம் இல்லை என்பதுவும் உறுதியாக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்கள் தமிழர்களின் இனத்தைச் சாராதவர்கள் என்பதை அறிந்தே 1990 இல் வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் இருந்து முஸ்லிம்கள் விரட்டி அடிக்கப்பட்டனர். அதனால்தான் வரலாறு அதனை

ஒரு இனச்சுத்திகரிப்பு முயற்சி என்று எழுதுகிறது. தமிழ் ஹிந்துக்கள், தமிழ் கிறிஸ்தவர்களை விரட்டியடிக்கமாட்டார்கள். ஏனெனில் தமிழர் சுயாட்சிக்காகப் போராடும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். அதனால் அங்கு ஹிந்து, கிறிஸ்தவம் என்ற மதப்பிரிவுகள் முக்கியத்துவம் பெறவில்லை. இன உணர்வே முன்நிற்கின்றது.

> **"தாம் ஒரு தனியான இனம் என்பதையும், தமது ஆட்சியை நடாத்துவதற்குத் தேவையான நிலப்பரப்பு தம்மிடம் உள்ளது என்பதையும் பற்றிய தெளிவில்லாமல், தம்மை ஒரு குழுவாகவும் அரசியலில் முக்கியத்துவமற்ற ஒரு புழுவாகவும் முஸ்லிம்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், நினைக்கும்படி சொந்த, அந்நிய அரசியல் சக்திகளால் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.**

ஆகவே முஸ்லிம்களைத் தம்மவர்களாக தமிழர்கள் ஏற்றுக் கொள்ளாததற்கு முதலாவதும் முக்கியமானதுமான காரணம் முஸ்லிம்கள் ஒரு தனித்த இனம் என்பதுதான். மதவேறுபாடு பலமான துணைக்காரணமாயிருக்கும்.

அத்தோடு முஸ்லிம்கள் வட - கிழக்கு மாகாணங்களில் அடையாளம் காட்டக்கூடிய பதினைந்து பெரும் நிலப்பிர தேசங்களில் அதிபெரும் பான்மையானவர்களாக இருக்கி றார்கள். இந்தப் பிரதேசங்கள் அனைத்தையும் நிலத்தொடர் பின்மையைக் கருத்திலெடுத்து ஒரு அதிகார அலகாக உருவாக்கி, ஏற்றுக்கொண்டு, இயங்கச் செய்ய முடியும்.

அதாவது இணைந்த வடக்கு. கிழக்கில் நிலத்தொடர்பற்ற இரண்டு அதிகார அலகுகளை ஏற்படுத்த முடியும்.

ஒன்று, தமிழர் பெரும்பான்மை அதிகார அலகு.
மற்றது முஸ்லிம் பெரும்பான்மை அதிகார அலகு.

இவ்வாறு இணைந்த வடக்கு, கிழக்கில் ஒரு முஸ்லிம் பெரும்பான்மை அதிகார அலகு உருவாக்கப்படுவதை தமிழர் தரப்பு ஒருபோதும் விரும்பப்போவதில்லை.





முஸ்லிம் பிரதேசங்களையும் விழுங்கி வடக்கு, கிழக்கு மாகாணங்கள் முற்றிலும் தமது ஆட்சி அதிகாரத்தை நிலைநிறுத்தவே தமிழர் தரப்பு வேகமாக, பயங்கரமாகச் செயற்படுகிறது.

இதனை எதிர்த்து எழும்பச் சாத்தியமான முஸ்லிம் எழுச்சியை முளையிலேயே கிள்ளும் முயற்சிகளில் உள்ளவைதான் வடமாகாண முஸ்லிம் இனச்சுத்திகரிப்பும் கிழக்குமாகாண இனப்படுகொலை, அடக்கு முறைகளும்.

‘முஸ்லிம்கள் ஆட்சி அதிகாரத்துக்கான கோரிக்கையை முன்வைத்துப் போராடக்கூடிய அத்தனை தகுதிகளையும் கொண்டுள்ளனர். தமக்கென்று புறம்பான ஆட்சி அதிகாரத்தை ஏற்படுத்தி இயக்கக்கூடிய நிலப்பரப்பு மன்னார் மாவட்ட முசலியில் தொடங்கி திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா, மூதூர், தம்பலகாமம், புல்மோட்டை, மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓட்டமாவடி, வாழைச்சேனை, ஏறாவூர், காத்தான்குடி, அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, நிந்தவூர், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பொத்துவில், இறக்காமம் என்று முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்கள் நிலத்தொடர்பு அற்றவகையில் வடக்கு கிழக்கு முழுவதும் நீண்டிருக்கின்றன.’

தாம் ஒரு தனியான இனம் என்பதையும், தமது ஆட்சியை நடாத்துவதற்குத் தேவையான நிலப்பரப்பு தம்மிடம் உள்ளது என்பதையும் பற்றிய தெளிவில்லாமல், தம்மை ஒரு குழுவாகவும் அரசியலில் முக்கியத்துவமற்ற ஒரு புழுவாகவும் முஸ்லிம்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்; நினைக்கும்படி சொந்த, அந்நிய அரசியல் சக்திகளால் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

தமக்கென ஒரு தாயகமும். தாம் விரும்பியவாறு ஒரு தேசமாகப் பிரிந்து செல்லக்கூடிய சுயநிர்ணய உரிமையும், தனித்தே, பிரிந்தே செயற்பட வேண்டுமென எச்சரிக்கும் உளவியல் ரீதியான தேவைப்பாடும், சேர்ந்து வாழும் எண்ணங்களைப் பயங்கரப்படுத்தும் கடந்தகாலக் காயங்களும்,

நிகழ்கால இரத்த வடிப்பும், தம்மைத்தாமே ஆட்சி செய்யும் தகுதியும், தத்துவமும் பற்றி முஸ்லிம்கள் அக்கறையற்று இருப்பது பெருந்தீமையாகவே முடியும்.

நாம் ஒரு தேசியம்; நாம் முஸ்லிம் தேசியம்; நாமெல்லாரும் முஸ்லிம் தேசியவாதிகள் என்ற அந்தஸ்தை நாம் அறிந்து கொள்ளவேண்டும். நம்மவர்களை அறியச் செய்யவேண்டும்.

நமது அபிலாஷைகளை வென்றெடுக்கும் உரிமைப்போராட்டங்களின் அடிப்படையை நாம் புரிந்து கொள்ளவேண்டும். அத்திவாரத்தைக் கட்டி எழுப்பவேண்டும். பாரிய தியாகங்கள் பற்றிப் படித்தறியவேண்டும்.

வட - கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம்கள் அனைவரும் ஓர்மதம், ஓரினம், ஓர்குலம், ஓர்குணம் என்பதை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும். ஊர், மாவட்டம், மாகாணம் என்பதெல்லாம் நிர்வாகத் தேவைகளுக்காய் வைக்கப்பட்ட பெயர்களே. அந்தப் பெயர்கள் முஸ்லிம்களைப் பிளவுபடுத்துவதற்கு உபயோகப்படுத்தப்படக்கூடாது. சகல முஸ்லிம் பிரதேசங்களையும் நாமே வாழும் பிரதேசங்களாக நாம் கொள்கை அளவிலும்,செயற்பாடுகளிலும் காட்டுபவர்களாக இருக்கும்போதுதான் பொது முஸ்லிம் நலன்களைப் பற்றிப் பேசும் யோக்கியதை நமக்கு இருக்கும். பிற முஸ்லிம் பிரதேசங்ளைச் சுரண்டி தாம் வாழும் பிரதேசத்தின் வயிற்றைப் புடைக்கச் செய்பவர்கள் பொது முஸ்லிம்களின் நன்மை பற்றிப் பேசமுடியாது. அப்படி அவர்கள் பேசினாலும், அந்தப் பேச்சு வெற்றுப் பேச்சாய்த்தான் இருக்கும்.

ஆட்சி அதிகாரத்துக்கான கோரிக்கையை முன்வைக்கும் அந்தஸ்து ஒரு சமூகத்துக்குக் கிடையாது. வட - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் கிறிஸ்தவர்கள் ஒரு சமூகம் மாத்திரமே. அவர்களை ஒரு தேசியம் என்று கூற முடியாது. அதற்குரிய தகைமைகள் அவர்களிடம் இல்லை. அதனால் கிறிஸ்தவ சமூகம் ஒரு தேசியம் ஆகமாட்டாது. அவர்கள் அதனைக் கோரவும் இல்லை. ஆட்சி அதிகாரத்தை ஏற்படுத்தி இயக்கும் ஒரு அடையாளம் காட்டக்கூடிய கணிசமான நிலப்பரப்பு தமிழ் கிறிஸ்தவர்களுக்கு இல்லை. மேலும் தமிழ் ஹிந்துக்களும், தமிழ் கிறிஸ்தவர்களும் பொதுவான மொழி, பொதுவான கலாசாரம், பொதுவான ஆள்புலம், பொதுவான பொருளாதாரம், பொதுவான உளவியல் ரீதியான ஒருமைப்பாடு, பொதுவான இனம் என்பவற்றால் பிரித்தெடுக்க முடியாதவாறு வடகிழக்கு மாநிலத்தில் ஒரே தேசியமாக செயற்பட்டு வருகின்றனர்.

முஸ்லிம்கள் ஆட்சி அதிகாரத்துக்கான கோரிக்கையை முன்வைத்துப் போராடக்கூடிய அத்தனை தகுதிகளையும் கொண்டுள்ளனர். தமக்கென்று புறம்பான ஆட்சி அதிகாரத்தை ஏற்படுத்தி இயக்கக் கூடிய நிலப்பரப்பு மன்னார் மாவட்ட முசலியில் தொடங்கி திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா, மூதூர், தம்பலகாமம், புல்மோட்டை; மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓட்டமாவடி, வாழைச்சேனை, ஏறாவூர், காத்தான்குடி; அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, நிந்தவூர், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பொத்துவில், இறக்காமம் என்று முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்கள் நிலத்தொடர்பு அற்ற வகையில் வடக்கு கிழக்கு முழுவதும் நீண்டிருக்கின்றன.

> ‘ முஸ்லிம்களைப் பலப்படுத்துவது பற்றிய அக்கறையைவிட தம்மையும், தமது கட்சிகளையும் பலப்படுத்துவதிலேயே முஸ்லிம் அரசியல் தலைவர்கள் குறியாக இருந்தனர். முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கும், அபிலாஷைகளை அடைந்து கொள்ளுவதற்கும் முஸ்லிம் கட்சிகள் உதவப் போவதில்லை என்பதோடு, அவை தடையாகவும் இருக்கப்போகின்றன என்பதை இனிமேலாயினும் பொதுமுஸ்லிம்கள் உணரவேண்டும். ’

தமிழ்த்தேசியத்திலிருந்து வேறுபட்ட இனமாக, வேறான நில ஆள்புலத்தோடு, வித்தியாசமான கலாசாரத்தையும், உளவியல் ரீதியான வேறுபாட்டையும் வட - கிழக்கு மாநில முஸ்லிம்கள் கொண்டிருக்கின்றனர். அதனால், முஸ்லிம்கள் தம்மை ஒரு குழுவாகவோ, கூட்டமாகவோ, சமூகமாகவோ எண்ணத்தேவையில்லை. வடகிழக்கு மாநிலத்தில் வாழும் தமிழர்களைப்போல தாமும் தனியான ஆட்சி அதிகாரத்துக்கு உரித்துடைய ஒரு தனித்த தேசியமாக - முஸ்லிம் தேசியமாகவே அடையாளம் காணப்பட்டு, அங்கீகரிக்கப்பட வேண்டும். சகல பேச்சுவார்த்தைகளிலும் சம அந்தஸ்தும், சம அதிகாரமும், சம சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்ட ஒரு தனித்தரப்பினராக முஸ்லிம் தேசியம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

இப்பொழுது தமிழர் தரப்பு, சமஷ்டியாட்சியை தமது அதிகாரத்திலுள்ள பிரதேசங்களில் அறிமுகப்படுத்தியுள்ளது. அதனை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டுமென்று தமிழர் தரப்பு அரசாங்கத்தின் காலில் விழுந்து கிடக்கப் போவதில்லை. அரசாங்கம் தொடர்ந்தும் நம்பிக்கையீனமாக நடக்க முயற்சிக்கிறது என்பதை விடுதலைப் புலிகள் தாங்கிக் கொள்ள முடியாத நிலைவரும் போது, அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கான கதவுகள் இழுத்து மூடப்பட்டுவிடும். தமிழீழப் பிரகடனம் ஒருதலைப்பட்சமாய் செய்யப்படும். வட-கிழக்கின் யுத்தம் தென் மாகாணங்களில் வெடிக்கும். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் அரசாங்கம் திணறும். ஏதாயினும் ஒரு நாடு வட-கிழக்கை ஒரு தனி நாடாக அங்கீகரிக்குமானால், நாளடைவில் வடகிழக்கு தமிழீழமாக மாறுவதை தவிர்க்க முடியாது போய்விடும்.

அவ்வாறு முஸ்லிம் தேசியம் அதிகாரப் பங்கீட்டுக்கு உரித்துடையவர்கள் என்பதனை அரசாங்கமும், தமிழ் தரப்பும், சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொள்ளச் செய்யும் வழிவகைகள் பற்றி முஸ்லிம்கள் ஒன்றுகூடித் தீர்மானித்து ஒரு முடிவை எடுத்து உலகுக்கு அறிவிக்க வேண்டும். ஒரே குரலில், ஒரே மொழியில், ஒரே தீர்வை முஸ்லிம்கள் வலியுறுத்த வேண்டும்.

இந்த நிலைப்பாட்டை சரிகண்டு, இதுவே முஸ்லிம்களின் ஏகோபித்த நிலைப்பாடாக இருக்க வேண்டுமென்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ள முடியும்.

இதனைச் சிறப்பாகச் செய்வதற்கு நமக்கிருக்கும் மிகப்பொருத்தமான சந்தர்ப்பம் இந்த 30.03.2006 இல் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தலாகும்.

இந்தத்தேர்தல்களில் சகல முஸ்லிம் கட்சிகளும், முஸ்லிம் அரசியல்குழுக்களும், சக்திகளும் ஒன்று சேர்ந்து ஒரு பொதுவான அரசியல் தீர்வை முன்வைத்து ஒரு பொதுக் கூட்டணியை உருவாக்கித் தேர்தல்களைச் சந்திக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாம் முன்வைத்திருந்தோம்.





வடக்கு, கிழக்கைச் சேர்ந்த சகல முஸ்லிம்களும், மேற்சொன்னவாறு உருவாக்கியிருக்க வேண்டிய முஸ்லிம் தேசியவாதிகள் கூட்டணிக்கு வாக்களித்து வட - கிழக்குத் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக முஸ்லிம்களின் பிரேரணைக்கு ஏகோபித்த வாக்காணையை வழங்க வேண்டும் என்றும் கூறியிருந்தோம்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஆரம்பிக்கப்படும் பேச்சுவார்த்தைகளின் கவனத்தை முஸ்லிம்களின் ஏகோபித்த கோரிக்கை தொடர்பாக ஈர்த்திருக்கும் வாய்ப்பு பற்றியும் அறிவித்திருந்தோம்.

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, தனியான சந்திப்புக்கள் மூலமாக அனைத்து முஸ்லிம்களும் ஒன்றிணையவேண்டும் என்ற எமது கோரிக்கை முஸ்லிம் கட்சிகளின் ஆதரவைப் பெறத் தவறியது பெரும் துரதிர்ஷ்டவசமானதாகும். அரசாங்க சார்பான முஸ்லிம் கட்சிகளின் மத்தியிலும் எமது கோரிக்கை எடுபடாமல் போயிற்று.

முஸ்லிம்களைப் பலப்படுத்துவது பற்றிய அக்கறையைவிட தம்மையும், தமது கட்சிகளையும் பலப்படுத்துவதிலேயே முஸ்லிம் அரசியல் தலைவர்கள் குறியாக இருந்தனர். முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கும், அபிலாஷைகளை அடைந்து கொள்ளுவதற்கும் முஸ்லிம் கட்சிகள் உதவப்போவதில்லை என்பதோடு, அவை தடையாகவும் இருக்கப்போகின்றன என்பதை இனிமேலாயினும் பொது முஸ்லிம்கள் உணரவேண்டும்.

இன்றுள்ள அரசியல் நிலைமைகள் இன்னும் இறுக்கமடைந்து முஸ்லிம் கட்சிகள் தம்மைக் காத்துக் கொள்ளவும், வளர்த்துக் கொள்ளவும் தமது நிலைப்பாடுகளில் கூர்மையடைந்து கொள்ளும். பேரினவாதக் கட்சிகளிடையே பேரம் பேசிக்கொண்டு தமது இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும். முஸ்லிம் தேசியம் வெறும் கற்பனையாகவும், முஸ்லிம்களுக்கான அதிகாரப்பங்கீடு கவர்ச்சியில்லாத கதையாகவும் மாறி, நாறிப்போகும். வட - கிழக்கு மாநில முஸ்லிம்கள் தமது தன்மானத்தை இழந்து குற்றேவல் செய்யும் குறிக்கோளற்ற கும்பலாய் உருமாறிக் கொள்ளுவர்.

இன்னொரு விதமாகவும் முஸ்லிம்கள் ஆபத்தை எதிர்நோக்கும் சாத்தியமும் உண்டு. அதுபற்றி எழுதுவதும் ஒரு சமூகக் கடமையாக இருக்கிறது.

அம்பாறை மாவட்ட தென்புறமிருந்து வடக்கையும் கிழக்கையும் பிரிக்கவேண்டுமென்ற ஒரு கோஷம் முன்வைக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மீது தமிழர் தரப்பிலிருந்து புரியப்பட்டு வரும் படுகொலைகளும் வன்முறைகளும் திருப்பித்தாக்க ஏதும் இயக்கமும், ஆயுதமும், சக்தியுமற்ற முஸ்லிம்களிடம் இந்த வடக்கு, கிழக்குப் பிரிவுபற்றிய கோஷம் சீலைக்கு மேலாகச் சொறிந்த திருப்தியைத் தந்துள்ளது.

அப்பாவி முஸ்லிம்கள் மீது தமிழ் ஆயுதக்குழுக்கள் புரியும் அட்டூழியங்களைத் தடுத்து நிறுத்த திட்டங்கள் ஏதும் முன்வைக்கப்படாத நிலையிலும், முஸ்லிம்களின் ஆத்திரத்துக்கு வடிகான் இல்லாத நிலைமையிலும் தமிழர் தரப்பின் போராட்டத்தை ஏதேனும் வகையில் கொச்சைப்படுத்துவதில் ஒரு சுகம் காண்பதற்கு நினைக்கும் பாமர முஸ்லிம்கள் இதனை மேலெழுந்த வாரியாக ஆதரிக்கவே செய்வர். ‘தனக்குத் தாலியறுந்தாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனம் பிழைத்தால் போதும்’ என்று திருப்திப்படும் மனநிலையில் வட - கிழக்கு முஸ்லிம்களின் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பிரேரணைகள் அமைந்து விடக்கூடாது.

வடக்கையும் கிழக்கையும் பிரிப்பது வட - கிழக்கு முஸ்லிம்களுக்கு ஒரு தீர்வாக அமையமாட்டாது. வடக்கையும் கிழக்கையும் பிரிக்க எந்த அரசாங்கமும் முன்வரப்போவதும் இல்லை.

வடக்கு கிழக்கின் தற்காலிக இணைப்பை ஒரு வருடத்துக்கு மாத்திரம் செய்வதாகச் சொன்ன ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா அதற்குப் பின் இரு வருடங்கள் ஆட்சி செய்தார். அவரால் இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களை பாராளுமன்றத்தில் ஆறுக்கு ஐந்து பெரும்பான்மையை வைத்துக் கொண்டு இருந்தபோதே ஜயவர்த்தனவால் பிரிக்க முடியவில்லை. பின்னர் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி பிரேமதாசா, ஜனாதிபதி விஜயதுங்க என்று ஐ. தே. கட்சியைச் சேர்ந்த எந்த ஜனாதிபதியாலும் வடக்கையும் கிழக்கையும் தற்காலிக இணைப்பிலிருந்து பிரிக்க முடியவில்லை. அவ்வாறு பிரிக்கவேண்டுமென்ற கோஷம் அதிதீவிர சிங்கள இனவாதிகளால் முன்வைக்கப்பட்டு பல ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்பட்டபோதும் வடக்கு, கிழக்கு பிரிவது சாத்தியப்படாமற் போயிற்று.

அதற்குப் பிறகு பதவிக்கு வந்து பத்து ஆண்டுகள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா பண்டாரநாயக்காவுக்கும்





அது முடியாமல் போயிற்று. வருடாவருடம் பத்து தடவைகள் அந்த இணைப்பை நீட்டிக் கொள்ள வேண்டிய நிலைமையே இருந்தது. விடுதலைப் புலிகள் ஜனாதிபதி பிரேமதாசவைப் படுகொலை செய்து, ஜனாதிபதி சந்திரிகாவின் உயிருக்கு உலைவைக்க வெடிகுண்டை வெடித்து கண்ணைப் பறித்த பின்னரும்கூட தற்காலிக வடக்கு, கிழக்கு இணைப்பு தொடரவே செய்தது.

கடைசியாக இந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் பதவிக்கு வந்ததும் வராததுமாக தற்காலிக வடக்கு கிழக்கு இணைப்பை மேலும் ஒரு வருடத்துக்கு நீட்டவே செய்தார்.

விடுதலைப் புலிகளை விட்டுப்பிரிந்து குழுவாக இயங்கும் கருணாவிடம்கூட வடக்கையும் கிழக்கையும் பிரிக்க வேண்டுமென்ற கொள்கை தற்போது இல்லை.

மேலும் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை

“

வட-கிழக்கில் வாழுகின்ற முஸ்லிம்கள் அனைவரினதும் மொத்த நன்மையைக் கருதி இணைந்த வட-கிழக்கில் தமிழர்களுக்கென ஒரு ஆட்சி அதிகாரப் பங்கீட்டை தமிழர் பிரதேசங்களை இணைத்தும், முஸ்லிம்களுக்கான ஒரு ஆட்சி அதிகாரப் பங்கீட்டை முஸ்லிம் பிரதேசங்களை இணைத்தும் உருவாக்குவதே வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் பரஸ்பர ஐக்கியத்தையும், நம்பிக்கையோடான கூட்டுறவையும், விட்டுக் கொடுப்போடான புரிந்துணர்வையும், தமிழ்மொழி மாநிலத்தின் உறுதிப்பாட்டையும், பொருளாதார மேம்பாட்டையும், நிரந்தர சமாதானத்தையும், அமைதியான வாழ்வையும் உறுதிப்படுத்த முடியும்.

இணைந்த வடக்கு கிழக்கு மாகாணங்களின் தமிழர் பெரும்பான்மைப் பிரதேசங்களை இணைத்து வட-கிழக்கு பெரும்பான்மை அதிகார அலகு ஒன்றையும், முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்களை இணைத்து வட-கிழக்கு முஸ்லிம் பெரும்பான்மை அலகு ஒன்றையும் அடையாளம் காண்பதும் அங்கீகரிக்கப் போராடுவதும் முஸ்லிம்களின் கடமையாகும்.

”

மாவட்டம், மட்டக்களப்பு மாவட்டத்தின் முஸ்லிம் அரசியல் தலைவர்களில் எவரும் வடக்கையும், கிழக்கையும் பிரிக்கவேண்டுமென்று கூறவில்லை. அவற்றைப் பிரிக்க வேண்டும் என்பதற்காக மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்தும்படி எந்த அரசாங்கத்தையும் கோரவில்லை.

வட - கிழக்குப் பிரச்சினையில் அதிக அக்கறையுள்ள இந்தியாவோ, அல்லது சமாதான தீர்வுக்காய் உழைப்பதாய் செயற்பட்டுவரும் மேற்குலக நாடுகளோ வடக்கையும் கிழக்கையும் பிரிக்கவேண்டுமென்ற நிலைப்பாட்டை ஒருபோதும் முன்வைத்ததில்லை.

அதிதீவிர சிங்கள இனவாதிகளும், அவர்களிடம் நன்மதிப்பு பெறவேண்டுமென்று செயற்படுபவர்களும் மாத்திரம்தான் தமது சொந்த அரசியல் நலனை அதிகரிக்க வடக்கு, கிழக்குப் பிரிவைப்பற்றிப் பேசி வருகிறார்கள்.

இவற்றிலிருந்து நமக்குப் புரியவேண்டிய உண்மை என்னவெனில், வடக்கு, கிழக்கைப் பிரிக்க வேண்டும் என்ற கொள்கை நடைமுறைச் சாத்தியமற்றது என்பதும் மக்களை ஏமாற்றித் தவறான வழியில் இட்டுச் செல்லும் நோக்கம் உடையது என்பதுமாகும்.

இவை ஒருபுறம் இருக்க....
வடக்கிலிருந்து கிழக்கு பிரிக்கப்பட்டால் என்ன விளைவுகள் ஏற்படக்கூடும் என்பதை நாம் சிரத்தையோடு சிந்தித்துப் பார்க்கவேண்டும். வடக்கிலிருந்து கிழக்கைப் பிரிக்கவேண்டுமென்று கிழக்கு மாகாண முஸ்லிம்களில் பெரும்பான்மையானோர் விரும்புகிறார்கள் என்பதாகவும், எவ்வாறோ வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்டாயிற்று என்றும் ஒரு பேச்சுக்கு எடுத்துக் கொள்வோம்.

முஸ்லிம்களின் வற்புறுத்தலின் மீது தமிழ்மொழி மாநிலம் துண்டாடப்பட்டது என்ற ஒரே காரணம் போதும் முஸ்லிம்கள் தமிழர்களின் நிரந்தர விரோதிகளாவதற்கு. அதன்காரணமாக முஸ்லிம்கள் மீது அழிவுப்படலம் தொடங்கப்படும்.

அதனால் வடக்கு மாகாண முஸ்லிம்கள் தமது தாயகத்துக்குத் திரும்பலாம் என்ற நம்பிக்கை அழிக்கப்படும். முஸ்லிம் இனச்சுத்திகரிப்பின் தீ நாக்குகள் உயிரைத்துளைத்தும், பொருளை எரித்தும் வடமாகாண முஸ்லிம்களை நிரந்தர அகதிகளாக்கிவிடும்.





அகதிகளாக்கப்பட்டு குடில்களிலும், கூடாரங்களிலும் அரைகுறை வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கும் வடமாகாண முஸ்லிம்களின் இதய மூலைகளை வருத்திக் கொண்டிருக்கும் 'ஊருக்குத் திரும்பவேண்டும்' என்ற தணியாத தாகம் கனவாகப் போகும். முழு வடக்கும் தமிழர் மயமாகும். நூற்றுக்கு நூறு வீதம் தமிழர் மயப்படுத்தப்பட்ட வடக்கு தனிநாட்டின் அந்தஸ்தை சுலபமாய்ப் பெற்றுக்கொள்ளும். விடுதலைப் புலிகளின் தரைப்படை, கடற்படை, விமானப்படை அனைத்தினதும் முதற்குறி கிழக்கை விடுவிப்பதாக இருக்கும். வட - கிழக்கு இணைப்பை எதிர்த்தவர்களை தண்டிப்பதாய் இருக்கும்.

அதற்கான முதல் நடவடிக்கையாக கிழக்கில் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படும். இதனால் ஓரக்கிராமங்களில் பாதுகாப்பற்றிருக்கும் முஸ்லிம்கள் ஒதுங்க முஸ்லிம் பிரதேசங்களில் இடமில்லாமல் சிங்கள மாவட்டங்களைச் சென்றடைய வேண்டிவரும். அப்போது அங்குள்ள சிங்களவர்களின் எதிர்ப்புகளையும், தொல்லைகளையும் ஒவ்வொரு கணமும் சந்திக்க வேண்டிவரும். முஸ்லிம் இனச்சுத்திகரிப்பு கிழக்கில் பரவலாக்கப்படும்.

ஓரக்கிராமங்கள் வெறுமையானதும் நடுமுஸ்லிம் கிராமங்கள் தமிழ்த்தீவிரவாதிகளின் தாக்குதல்களுக்குத் திறந்துவிடப்படும். அரசாங்கத்தை நம்பிக்கொண்டது எவ்வளவு பாரிய தவறு என்பது புரியவரும்!

கிழக்கு மாகாணத்து சிங்களவர்களைக் காப்பாற்றுவதற்காக கிழக்கு முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் பற்றி அரசாங்கம் கண்டும் காணாதிருக்கும். இவ்வாறு நீண்ட காலம் செல்லும். படிப்படியாக களை பிடுங்கப்படும். முஸ்லிம்களுக்காகப் பேசுவதற்கு யாரும் முன்வரமாட்டார்கள். ஒரு சிலரின் தவறான வழிநடாத்துதலால் ஒரு சமூகமே - கிழக்கு முஸ்லிம்கள் அனைவருமே அடிமை வாழ்வை நடாத்தும் நிலை ஏற்படும். இது தேவைதானா? புத்திசாலித்தனமானதா?

கிழக்கில் ஒரு ஆட்சி அமைப்பு ஏற்பட்டு, அந்த ஆட்சி அமைப்புக்கான தேர்தல் ஒன்றில் கிழக்குச் சிங்களவர்களின் ஒத்துழைப்போடு கிழக்கின் ஆட்சியை முஸ்லிம்கள் கைப்பற்ற முடியும் என்ற நினைப்பு நம்மவர் சிலரிடம் இருக்கிறது.

கிழக்கில் அந்த நேரம் அரசாங்க சார்புடைய சிங்களப் பெரும்பான்மைக் கட்சியினர் முஸ்லிம்களோடு சேர்ந்து ஆட்சியமைக்க முன்வரமாட்டார்கள்.

கிழக்கில் முஸ்லிம்களுக்கு நடக்கும் அநியாயங்கள் சிங்களவர்களுக்கு நடப்பதற்கு இடம் கொடுக்கமாட்டார்கள். அவர்கள் தமிழர்களோடு கூட்டு ஆட்சியாக சேர்ந்து கொள்வார்கள். இப்போது கிழக்கில் அரசியல் முக்கியத்துவம் பெற்ற இரண்டாம் இடத்தில் இருக்கும் முஸ்லிம்கள் கிழக்கில் மூன்றாந்தரப் பிரஜைகளாக ஆகிக் கொள்வார்கள்.

அவ்வாறு கிழக்குக்கென்று ஒரு ஆட்சி வந்து, தேர்தலும் நடக்கும் போது கிழக்கு முஸ்லிம்கள் நாலைந்து கட்சிகளாக எதிரும் புதிருமாகவே போட்டியிடுவார்கள். தேர்தலின் பின் முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் தமிழர் பெரும்பான்மை அரசாங்கத்தோடு சேர்ந்து கொள்ள முயற்சிப்பர். அவர்களுக்கு பட்டம் பதவிகள் அளித்து முக்கியத்துவம் கொடுத்து சௌகரியப்படுத்தி கிழக்குத் தமிழர் ஆட்சியில் அந்த முஸ்லிம்களைச் சேர்த்துக் கொள்வர். இவ்வாறு இந்த முஸ்லிம்களைச் சேர்த்துக் கொண்டு முஸ்லிம் தேசியவாத அரசியல் முயற்சிகளை முறியடிப்பதுவும், முஸ்லிம்களது உரிமைப் போராட்டங்களை துடைத்தெறிவதும் கிழக்குத் தமிழர் ஆட்சிக்கு சுலபமாக இருக்கும்.

> 1985ம் ஆண்டு எம்.ஐ.எம். முகியதீனை தலைவராகவும் எம்.எச். சேகு இஸ்ஸதீனை செயலாளராகவும் கொண்டியங்கிய கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணியே 1986ல் முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபைக்கான கருத்திட்டத்தை முன்வைத்தது. இப்போது 20 ஆண்டுகளுக்குப் பின்னும் அதுபற்றி ஒரு தீர்க்கமான, தெளிவான பிரேரணையை முன்வைக்க முடியாமல் முஸ்லிம் அரசியல் தலைமைகள் திணறிக் கொண்டிருக்கின்றன!

வடக்கில் ஏற்பட்ட தமிழீழ ஆட்சியிலிருந்து கிழக்குத் தமிழர்கள் பிரிவதற்கு காரணங்களில் ஒன்றாக இருந்தவர்கள் என்று கருதி முஸ்லிம்களை வஞ்சகம் தீர்த்துக் கொள்வதும் கிழக்குத் தமிழர் ஆட்சிக்கு இலகுவான தாகவே இருக்கும்.

கிழக்கின் முஸ்லிம் பிரதேசங்கள் ஏதேனும் ஒரு அடிப்படையில் துண்டாடப்பட்டு தமிழ்ப் பிரதேசங்களோடு இணைக்கப்பட்டு தனித்துவப் பொலிவை இழக்கும். முஸ்லிம் தேசம் கரைந்து போகும். முஸ்லிம் தேசியம், சமூகமாகி, கூட்டமாகிக் குழுவாகி தத்தம் வீடுகளில் அகதிகளாக்கப்பட்டு வாழும் நிலை ஏற்படும். இதற்கு நீங்கள்





சம்மதம்தானா? இந்த அவல நிலைமையை முஸ்லிம் தேசியத்தின் மீது திணிப்பதற்கான ஆதரவை, அதிகாரத்தை வழங்குவதற்கு நீங்கள் தயார்தானா?

முஸ்லிம்களின் தொடர்ச்சியான முயற்சிகளாலும், தியாகங்களாலும் முஸ்லிம் தேசியம் சுறுசுறுப்பாகக் கட்டியெழுப்பப்படுமானால் கிழக்குப் பிரிந்த நிலையிலும் கிழக்கிலுள்ள முஸ்லிம் பிரதேசங்களை ஆரம்பத்தில் சொன்னவாறு நிலத்தொடர்பின்மையைக் கருத்திலெடுத்து கிழக்கில் மாத்திரமாயினும் ஒரு அதிகார அலகை பெற்று வரையறுக்கப்பட்ட சுயாட்சியை முஸ்லிம்கள் பெற்றுக் கொள்ள முயலலாம். ஆனால், அவ்வாறான கோரிக்கையை முன்வைக்காமல் அதனை வலியுறுத்தும் கொள்கைக் கோட்பாடுகள் எதுவும் இல்லாமல் வடக்கிலிருந்து கிழக்கைப் பிரிப்பதனால் முஸ்லிம்களுக்கு என்ன நன்மை கிட்டப் போகிறது?

இப்பொழுது தமிழர் தரப்பு, சமஷ்டியாட்சியை தமது அதிகாரத்திலுள்ள பிரதேசங்களில் அறிமுகப்படுத்தியுள்ளது. அதனை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டுமென்று தமிழர் தரப்பு அரசாங்கத்தின் காலில் விழுந்து கிடக்கப் போவதில்லை. அரசாங்கம் தொடர்ந்தும் நம்பிக்கையீனமாக நடக்க முயற்சிக்கிறது என்பதை விடுதலைப் புலிகள் தாங்கிக் கொள்ள முடியாத நிலைவரும் போது, அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கான கதவுகள் இழுத்து மூடப்பட்டுவிடும். தமிழீழப் பிரகடனம் ஒருதலைப்பட்சமாய் செய்யப்படும். வட-கிழக்கின் யுத்தம் தென் மாகாணங்களில் வெடிக்கும். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் அரசாங்கம் திணறும். ஏதாயினும் ஒரு நாடு வட-கிழக்கை ஒரு தனி நாடாக அங்கீகரிக்குமானால், நாளடைவில் வடகிழக்கு தமிழீழமாக மாறுவதை தவிர்க்க முடியாது போய்விடும்.

நாட்டின் ஒற்றையாட்சி சிங்களப் பிரதேசங்களில் மட்டும்தான் இருக்கும். வட-கிழக்கு தனித்த ஒற்றையாட்சி நாடாகிவிடும்.

அவ்வாறு வட-கிழக்கு தனி நாடானால், முஸ்லிம்களுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்லடியில் தொடங்கி அம்பாரை மாவட்டத்தின் கரையோரத் தொங்கல் வரை ஒரு சமஷ்டியாட்சியை தமிழர்கள் தருவார்களா? அப்படித்தான் தமிழர்விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டைத் தமிழீழப் பிரகடன யாப்பில் 1978ல் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆனால், தமிழீழம் கிடைத்ததும் தமிழர் தரப்பு, முஸ்லிம்களுக்கு அவ்வாறான ஒரு முஸ்லிம் பெரும்பான்மை அதிகாரப் பங்கீட்டு ஏற்பாட்டை

இப்போது செய்யும் மனநிலையில் இல்லை. முஸ்லிம்களுக்கு ஆட்சி அதிகாரத்தில் எந்தப் பங்கும் கிடைக்கமாட்டாது.

அவ்வாறு உருவாக்கப்படும் தமிழீழத்திற்கு அடக்கமாகவே சகல முஸ்லிம் பிரதேசங்களும் இருக்கும். அதனால், அப்போது முஸ்லிம்களுக்கான பிரதேசங்களை இணைத்து ஒரு அதிகாரப்பங்கீட்டையும் அதிகார அலகையும் பெற்றுக் கொள்வது முடியாத காரியமாக்வே இருக்கும்.

ஆகவே, இணைந்த வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம்கள் தமக்கொரு ஆட்சி அதிகாரத்தை பெற்றுக் கொள்ள தமது பிரதேசங்க ளைத் தனிமைப்படுத்தக் கோரும் அரசியல் நடவடிக்கைகளை ஆர்வத்தோடும், ஆர்ப்பாட்டங்களோடும் செய்யத் தயாராக வேண்டும்.

## முஸ்லிம்கள் இறுதியாகத் தீர்மானிக்க வேண்டிய விடயங்கள்:

01. வடக்கு கிழக்கில் தமிழர் ஆட்சியை அங்கீகரித்து அவர்கள் ஆட்சியின் கீழ் அதன் பிரஜைகளாக வாழ்வது
02. வடக்கையும் கிழக்கையும் பிரிக்கக் கோருவது
03. வடக்கு கிழக்கில் உள்ள முஸ்லிம் பிரதேசங்களை இணைத்து அப்பிரதேசங்களில் முஸ்லிம் ஆட்சியை நிறுவுவது - அது தமிழர் பிரதேச ஆட்சிக்கு சமமான ஆட்சியாக இருப்பது.

அதாவது வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் தமக்காக ஒரு ஆட்சியை நிறுவுவதா? அல்லது தமிழர் ஆட்சியின் கீழ் வாழ்வதா?

தமது ஆட்சியின் கீழ் முஸ்லிம்களைச் சேர்த்துக் கொள்ளுவது எவ்வாறு என்பது பற்றி தமிழர் தரப்பினர் இதுவரை முஸ்லிம்களுக்குச் சொன்னது கிடையாது.

முஸ்லிம்களுக்குத் தேவைப்பட்டால் அதுபற்றி தமிழர்களோடு, அவர்களாகக் கதைப்பது அல்லது நடப்பதைக் கண்டுகொள்ளட்டும் என்ற அலட்சியப் போக்கிலேயே தமிழர் தரப்பு செயற்பட்டு வருகிறது.

வட-கிழக்கில் வாழுகின்ற முஸ்லிம்கள் அனைவரினதும் மொத்த நன்மையைக் கருதி இணைந்த வட-கிழக்கில் தமிழர்களுக்கென ஒரு





ஆட்சி அதிகாரப் பங்கீட்டை தமிழர் பிரதேசங்களை இணைத்தும், முஸ்லிம்களுக்கான ஒரு ஆட்சி அதிகாரப் பங்கீட்டை முஸ்லிம் பிரதேசங்களை இணைத்தும் உருவாக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம்தான் வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் பரஸ்பர ஐக்கியத்தையும், நம்பிக்கையோடான கூட்டு வாழ்வையும், விட்டுக் கொடுப்போடான புரிந்துணர்வையும், தமிழ்மொழி மாநிலத்தின் உறுதிப் பாட்டையும், பொருளாதார மேம்பாட்டையும், நிரந்தர சமாதானத்தையும், அமைதியான வாழ்வையும் உறுதிப்படுத்த முடியும்.

இணைந்த வடக்கு கிழக்கு மாகாணங்களின் தமிழர் பெரும்பான்மைப் பிரதேசங்களை இணைத்து வட-கிழக்கு பெரும்பான்மை அதிகார அலகு ஒன்றையும், முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்களை இணைத்து வட-கிழக்கு முஸ்லிம் பெரும்பான்மை அதிகார அலகு ஒன்றையும் அடையாளம் காண்பதும் அங்கீகரிக்கப் போராடுவதும் முஸ்லிம்களின் கடமையாகும்.

1985ம் ஆண்டு எம்.ஐ.எம். முகியதீனை தலைவராகவும் எம்.எச். சேகு இஸ்ஸதீனை செயலாளராகவும் கொண்டியங்கிய கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணியே 1986ல் முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபைக்கான கருத்திட்டத்தை முன்வைத்தது. இப்போது 20 ஆண்டுகளுக்குப் பின்னும் அதுபற்றி ஒரு தீர்க்கமான, தெளிவான பிரேரணையை முன்வைக்க முடியாமல் முஸ்லிம் அரசியல் தலைமைகள் திணறிக் கொண்டிருக்கின்றன.

முஸ்லிம்களுக்கான ஒரு அரசியல் கட்சியாக 1986 நவம்பரில் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபைக் கோரிக்கையை, முஸ்லிம்காங்கிரஸின் தவிசாளரும் இரண்டாவது தலைவருமான எம்.எச்.சேகு இஸ்ஸதீனின் வேண்டு கோளின்படி தத்தெடுத்துக் கொண்டது. பின்னர், அதிகாரத் தேவைகளுக்கு அடிபணிந்து 1994ல் அமைச்சரவையில் சேர்ந்து கொண்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் அதிகாரப்பகிர்வுக்கான போராட்டத்தை வாய்ப்பேச்சளவில் நிறுத்திக் கொண்டது. அப்போது முஸ்லிம் காங்கிரஸில் சேகு இஸ்ஸதீன் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் காங்கிரஸ், நுஆ என்று சகல சமூக மக்களையும் சேர்த்துக் கொண்ட கட்சியாக மாறவிரும்பியதிலிருந்து முஸ்லிம்களின் போராட்டம் மேலும் மோசமடைந்தது. முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரின்

மறைவும், அதனையொட்டி முஸ்லிம் காங்கிரஸுள் ஏற்பட்ட வெடிப்புகளும் இன்று முஸ்லிம் காங்கிரஸ் துண்டாடப்பட்டு அதிகாரமற்று இருக்கின்ற நிலைமையும் முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளுக்கான போராட்டத்தை மலினப்படுத்துவதிலேயே முடிந்துள்ளது.

முஸ்லிம்களை நிரந்தரமாய்ப் பிரித்தாள வேண்டும் என்று கங்கணம் கட்டியுள்ள சிங்களப் பேரினவாதிகள் முஸ்லிம்களிடையே புதுப்புது கட்சிகளை உருவாக்கி விடுவதிலும், வளர்த்துக் கொடுப்பதிலும் மிகுந்த ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். ஏற்றத்துக்கு மாற்றமானதும் எதிரும் புதிருமானதுமான கொள்கைக் கோட்பாடுகளை முஸ்லிம்களிடம் விதைத்து முஸ்லிம் ஒருமைப்பாட்டை சிதறடித்து வருகின்றனர்.

வட-கிழக்கு முஸ்லிம்கள் நிரந்தர சமாதானத்தை அடைவதிலிருந்தும் அவர்களைத் தடுத்து தமது லாபத்துக்காய் தமிழர்களோடு முஸ்லிம்களை நிரந்தரமாக மோத வைப்பதில் சிங்களப் பேரினவாத சக்திகள் ஒருமித்து இயங்குகின்றன.

> “முஸ்லிம்களை நிரந்தரமாய்ப் பிரித்தாள வேண்டும் என்று கங்கணம் கட்டியுள்ள சிங்களப் பேரினவாதிகள் முஸ்லிம்களிடையே புதுப்புது கட்சிகளை உருவாக்கிவிடுவதிலும், வளர்த்துக் கொடுப்பதிலும் மிகுந்த ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். ஏற்றத்துக்கு மாற்றமானதும் எதிரும் புதிருமானதுமான கொள்கைக் கோட்பாடுகளை முஸ்லிம்களிடம் விதைத்து முஸ்லிம் ஒருமைப்பாட்டை சிதறடித்து வருகின்றனர். வட-கிழக்கு முஸ்லிம்கள் நிரந்தர சமாதானத்தை அடைவதிலிருந்தும் அவர்களைத் தடுத்து தமது லாபத்துக்காய் தமிழர்களோடு முஸ்லிம்களை நிரந்தரமாக மோத வைப்பதில் சிங்களப் பேரினவாத சக்திகள் ஒருமித்து இயங்குகின்றன. தமிழர்களிடமிருந்து சிங்களவர்களையும் சிங்களப் பிரதேசங்களையும் பாதுகாப்பதற்கு முஸ்லிம்களையும் முஸ்லிம் பிரதேசங்களையும் இடையில் நிறுத்திச் செயற்படுகின்றனர்.”

> "விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே தொடர்ந்து நடைபெறப்போகின்ற பேச்சுவார்த்தைகள் அரசியல் தீர்வு தொடர்பானதாக, இடைக்கால ஆட்சி தொடர்பானதாக அமையும் போது முஸ்லிம்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அப்போது முஸ்லிம்களின் உண்மையான பிரதிநிதிகள் ஒரு தனித்தரப்பாக முஸ்லிம்களின் அபிலாசைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி முஸ்லிம்களுக்கான அரசியல் தீர்வை தெளிவாக முன்வைக்கக்கூடியதாக செல்வது அத்தியாவசியமானதாக இருக்கும். அதற்கான முயற்சிகளை முஸ்லிம்கள் இப்போதிருந்தே ஆரம்பித்து வைக்க ஒன்று சேருவது அவசியமானதாகும். இந்த வரலாற்றுத் தேவையையும், பணியையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்!"

தமிழர்களிடமிருந்து சிங்களவர்களையும் சிங்களப் பிரதேசங்களையும் பாதுகாப்பதற்கு முஸ்லிம்களையும் முஸ்லிம் பிரதேசங்களையும் இடையில் ஓர் அரணாக நிறுத்திச் செயற்படுகின்றனர். இதற்கு நம்மவர்கள் சிலர், அறியாமை காரணமாக முகவர்களாக செயற்படுவது எமக்கு வேதனையளிப்பதாக இருக்கிறது.

இந்த நிலமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து முஸ்லிம் சமூகத்தை ஒற்றுமைப்படுத்துவது அவசியமானதாகும். ஒற்றுமைப்பட்ட முஸ்லிம் அரசியல் சக்திகளின் பிரதிநிதிகள் வட-கிழக்குத் தமிழ்த் தலைவர்களோடு காத்திரமான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து தமக்குள் இணக்கம் காணும் வழிவகைகளைத் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றிணைந்து தேடுவது முக்கியமானதாகும். இந்த விடயத்தில் தமிழர்களின் பேச்சாளராக இருக்கும் விடுதலைப் புலிகள் முஸ்லிம்களோடு பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவது இந்த காலகட்டத்தின் அவசரமானதும் அவசியமானதுமான தேவைப்பாடாக இருக்கிறது. அத்தோடு தமிழர் தரப்பிடையே ஏற்பட்டுள்ள பிரிவினைகளை வளர்ப்பதற்கு

இந்த விடயத்தில் தமிழர்களின் பேச்சாளராக இருக்கும் விடுதலைப் புலிகள் முஸ்லிம்களோடு பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவது இந்த காலகட்டத்தின் அவசரமானதும் அவசியமான துமான தேவைப்பாடாக இருக்கிறது.'

முஸ்லிம்கள் ஒத்துழைப்பு வழங்காமல் சகல தமிழ் அரசியல் சக்திகளையும் ஒற்றுமைப்படுத்த தமது பங்களிப்பைச் செய்வதும் முக்கியமாக இருக்கும்.

அதனால் முஸ்லிம்களைத் தவறான வழியில் இட்டுச் செல்ல முனைகின்ற முஸ்லிம் அரசியல் சக்திகளை ஓரங்கட்டி பலமிழக்கச் செய்வது முஸ்லிம்களின் கடமையாகும்.

விஷேடமாக 30.03.2006ல் நடைபெறப்போகின்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் முஸ்லிம்கள் அனைவரும் ஒரு தேர்தல் உடன்பாட்டுக்கு வந்து செயற்படுவது இன்றைக்கும் சாத்தியமான ஒன்றாகவே இருக்கிறது.

அது முடியாது போகும் பட்சத்தில் முஸ்லிம்களின் உரிமைகளை உறுதிப்படுத்தி, இணைந்த வடக்கு கிழக்கில் முஸ்லிம்களின் அதிகாரப் பங்கீட்டுக்காக உழைக்கின்ற முஸ்லிம் தேசியவாத சிந்தனைத் தலைமைத்துவத்துக்கு வாக்களிப்பதே இன்றுள்ள நிலையில் முஸ்லிம்கள் செய்யக்கூடிய ஒன்றாகும்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே தொடர்ந்து நடைபெறப்போகின்ற பேச்சுவார்த்தைகள் அரசியல் தீர்வு தொடர்பானதாக, இடைக்கால ஆட்சி தொடர்பானதாக அமையும் போது முஸ்லிம்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அப்போது முஸ்லிம்களின் உண்மையான பிரதிநிதிகள் ஒரு தனித்தரப்பாக முஸ்லிம்களின் அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி முஸ்லிம்களுக்கான அரசியல் தீர்வை தெளிவாக முன்வைக்கக்கூடியதாக செல்வது அத்தியாவசிய மானதாக இருக்கும். அதற்கான முயற்சிகளை முஸ்லிம்கள் இப்போதிருந்தே ஆரம்பித்து வைக்க ஒன்று சேருவது அவசியமானதாகும். இந்த வரலாற்றுத் தேவையையும், பணியையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்!

இன்று முஸ்லிம்களின் சிந்தனைத் தலைமைத்துவம், முஸ்லிம் தேசியவாத சக்திகளிடமே இருக்கிறது. அச்சிந்தனைகளைச் செயற்படுத்த முஸ்லிம் தேசியவாதிகள் இயக்கம் மக்களின் முன் வந்துள்ளது. அத்துடன் எமது முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியற்





கட்சிகளையும், சமூக அரசியல் நிறுவனங்களையும், சமூக ஆளுமைகளையும் சேர்த்துக் கொண்டு பொதுத் தீர்வுத் திட்டத்தை உருவாக்கி முன்வைத்துப் போராட முஸ்லிம் மக்களை ஓரணி திரளுமாறு மிகுந்த சமூகக் கரிசனையில் வேண்டுகிறோம்.

முஸ்லிம்களைப் பிளவுபடுத்தும் சக்திகளை திருத்தி, முஸ்லிம் தேசியத்தைக் கட்டி வளர்க்கும் பணியில் சேர்ந்து அர்ப்பணத்துடன் உழைத்து முஸ்லிம் தேசத்தை வென்றெடுக்க முஸ்லிம் சமூக சிந்தனையாளர்களும், போராளிகளும் முன்வர வேண்டும்.

அல்லாஹ் பெரியவன்!

**எம். எச். சேகு இஸ்ஸதீன்**
ஸ்தாபகர்,
**முஸ்லிம் தேசியவாதிகள் இயக்கம்**
077 3588999

இனவெறியர்கள் கொன்று குவித்த
இஸ்லாமியரின் எலும்புக்கூடுகளை
எடுத்துக் கொண்டு வா!
முஸ்லிம் தேச எல்லைக்கு
வேலிக்கால்களாய் நட்டு வைப்போம்.

அவர்கள் இரத்தம் பாய்ந்த மண்ணை
சேர்த்துக் கொண்டு வா!
அவர்கள் வடித்த கண்ணீரால் பிசைந்து
நமது கோட்டையைக் கட்டுவோம்.

தூக்கம் தொலைத்துப்பழகிப்போன
தாய்க்குலத்துக்குப் பயிற்சிகொடு!
கோட்டையை வளைத்து நிறுத்தி வைப்போம்.

இறைவணக்கத்தில் சுடப்பட்டவர்களின்
இதயத்துடிப்புகளை பதிவு செய்து வா!
முஸ்லிம் தேசிய கீதமாய் ஒலிபரப்புவோம்.

கூடுவிட்டு கூடுபாயும் ஜாலவித்தையை
கற்றுக் கொண்டுவா!
நம்மவர்கள் உடலுள் பதுறுப் படையினரை
புகுத்தி வைப்போம்.

சுதந்திர யாத்திரைக்குச் சவாரி கட்டு
விடுதலைக் கொடியில் அலிஃபைப் பொறி
முஸ்லிம் தேசம் கனவும் அல்ல;
தேசியவாதம் கற்பனையும் அல்ல.

~ ஷெய்க் இஸ்ஸதீன் யெமனி

இருபது வருடங்களைத் தாண்டிவிட்ட அடக்குமுறைகளுக்கு முடிவுகாண வேண்டிய காலம் வந்துள்ளது.

கோடான கோடி பெறுமதியுள்ள உடமைகளோடு பெறுமதிக்கு அப்பால் உயர்ந்த உயிர்களையும் ஆயிரக்கணக்கில் நாம் பறிகொடுத்துள்ளோம்.

அனைத்துக்கும் மேலாக, அடிப்படை மனித உரிமைகளையும் அமைதியான வாழ்வையும் படிப்படியாக இழந்து ஆதரிப்பார் யாருமற்ற நிலையில் காலங்கழித்து வருகிறோம். நமது சுதந்திர உணர்வு பறிக்கப்பட்டு, விடுதலை உணர்வு விறைத்துப் போகுமளவில் நாம் பயங்கரப்படுத்தி வைக்கப்பட்டுள்ளோம்.

இந்த நிலையை நாம் சரிகாண முடியவில்லை. இன்னும் கூர்மை அடையப்போகும் இனமேலாதிக்க தொழிற்பாடுகள் நம்மை அடிமைத்தனத்துக்கு முற்றாய் ஆட்பட வைத்துவிடும்.

அதனால் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வழிகள் பற்றி நாம் சிந்திக்கவும், பேசவும், செயற்படவும் வேண்டியுள்ளது. உயிரைப்பணயம் வைக்கும் உரிமைப்பயணத்திற்கு நாம் நம்மைத் தயார்படுத்த வேண்டியுள்ளது.

நமது மக்களின் சுதந்திரத்துக்கான போராட்டத்தை நாம் ஆரம்பிக்க வேண்டியுள்ளது. நமது விடுதலையை நாமே வென்றெடுக்க வேண்டியுள்ளது. நமக்கான தேசத்தை நாமே உருவாக்க வேண்டியுள்ளது.

முஸ்லிம் தேசியவாதத்தை வளர்த்தெடுப்பதன் மூலமே முஸ்லிம் தேசியத்திற்கான பலமான அத்திவாரத்தை அமைக்க முடியும். முஸ்லிம் தேசத்தைப் பிரகடனம் செய்வதன் மூலமே முஸ்லிம்களின் உரிமைகள் பற்றி உலகறியச் செய்ய முடியும்.

**முஸ்லிம்களின் தாகம் சமத்துவத் தாயகம்!**